**ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்**
**அவசரக் கூட்டம்**

**2021** ம் ஆண்டு ஜனவரி மாதம் **29** ம் நாள் வெள்ளிக் கிழமை பிற்பகல் **3.00** மணியளவில் நடைபெற்ற **அவசரக்** கூட்ட நடவடிக்கைகள்.

*முன்னிலை :- திருமதி.* ***D.*** *மல்லிகா,* ***B.Sc,***
*தனி அதிகாரி.*

**பொருள் எண் : 844**

அரசாணை எண் 368 நாள் நிதித்துறை ( SFC- MC) நாள் 07.10.2020ல் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களின் 2020-21ம் ஆண்டு வரவு செலவு திட்ட உரையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பில் நகர்ப்புற பகுதிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படும் பணிகளை ஒருமுறை செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி பணிகளை மாநில உயர்நிலைக்குழு முன்னிலையில் பொருள் வைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையுடன் பிரேரணை அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் 01.12.2020 ம் தேதிய கடிதம் ந.க.எண் தி4/9361/2020 ல் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு எரிவாயு தகன மேடை பணியினையும் மேற்கண்ட திட்டத்தில் சேர்க்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட திட்டத்தில் பின்வரும் பணிகளை மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் |
|---|---|---|
| 1 | ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி மதுரை சாலையில் உள்ள பொது மயானத்தில் எரிவாயு தகன மேடை அமைத்தல். | 150.00 |
| 2 | ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி மாதாங்கோயில் தெரு, வாழைக்குளம் ஒத்ததெரு, வாழைக்குளம் தெரு, என்.ஜி.ஓ. காலனி, கீழப்புதுத்தெரு, சக்கரைக்குளம் தெரு, திருவேங்கட அன்னைகள் தெரு, மேட்டுத்தெரு, மேட்டுதெரு மேல் வரிசை மற்றும் சந்திய கிணற்று தெரு ஆகிய இடங்களில் சிறு பாலம் அமைத்தல். | 10.00 |
| 3 | ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி பகுதியில் தன்யா நகர், அசோக் நகர், கோவிந்தன் நகர் காலனி பகுதிகளில் 20 வாட்ஸ் எல். இ.டி. விளக்குடன் 250 எண்ணம் தெருவிளக்குகள் அமைத்தல். | 25.00 |
| 4 | ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி பகுதியில் தன்யா நகர், அசோக் நகர், கோவிந்தன் நகர் காலனி பகுதிகளில் ஆகிய பகுதிகளில் குடிநீர் பகிர்மானக்குழாய் அமைத்தல். | 12.00 |
| | மொத்தம் | 197.00 |

எனவே ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி பகுதியில் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படும் மேற்கண்ட பணிகளை 2020-21 ம் ஆணைடிற்கு ஒருமுறை செயல்படுத்தப்படும் சிறப்புத்திட்டத்தின் கீழ் அரசு நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ள பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம்.**